LIBRARY
2 5 SEP 1959
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Friday, the 24th April 1959.

The House met in the Assembly Chamber, Arranmore Palace, Ootacamund, at 1 p.m., Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Statue of Kannagi

* 121 *Q*.—SRI A. A. RASHEED : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the cost involved in making the statue of Kannagi; and

(*b*) the authentic record on which the statue was based?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Rs. 300.

(*b*) The statue is based on a copy of the photo of Kannagi as installed in Ceylon.

SRI A. A. RASHEED : In view of the fact that Kannagi became famous because of Kovalan, is there any proposal to raise a statue for Kovalan also?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think we intend to raise a statue for Kovalan. But it is Kannagi, who is not only a historical figure but a legendary figure also.

SRI J. MATHA GOWDER : முன்னூறு ரூபாயில் படம் வரைவதை விட சிலையாகச் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The cost involved in making the statue is Rs. 300.

SRI K. RAMACHANDRAN : எந்த இடத்தில் நிறுவப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : காவேரிப்பூம்பட்டிணத்தில் நிறுவப்படும்.

SRI A. A. RASHEED : Will the Government consider the question of erecting statues for Kamban, Valluvar and Avvai also as for Kannagi?

MR. SPEAKER : How does the question arise out of the main question? The hon. Member must put a separate question.

[24th April 1959

SRI T. VELUCHAMI : இந்தக் கற்புக்கரசி கண்ணகியின் சிலை நிறுவப்படுவதன் நோக்கம் கற்பு நிலைக்கு ஊக்கம் காட்டுவதற்காகவா ? அதே போல் கற்புக்கரசர்களின் சிலையை நிறுவி ஆண்களின் கற்புக்கு ஊக்கம் அளிக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒவ்வொரு சிலையைப் பார்க்கும்போதும் அவரவர் மனப்பான்மைக்குத் தகுந்தவாறு கருத்துத் தோன்றும்.

SRI S. LAZAR : இந்தச் சிலையை செய்ய இருக்கிற சிற்பி யார் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அது பற்றி என்னிடம் தகவல் இல்லை.

SRI V. K. KRISHNAMURTHY : உலகப் புலவரால் போற்றப்பட்ட ஒழுக்க ராமன் சிலை நிறுவப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இல்லை.

[An hon. Member was seen waving his hands.]

MR. SPEAKER : Why does the hon. Member wave his hands like that? I can see him if he just raises his hands. If I do not see him, it means I do not want to call him. Let him not wave his hands like that.

SRI V. SANKARAN : கண்ணகியின் சிலையை கோவலனை இழந்த நிலையில் சித்தரித்திருக்கிறார்களா ? அல்லது கோவலன் இருக்கும்போது உள்ள நிலையில் சித்தரித்திருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கோவலன் இருக்கும்போது இருந்த நிலையும் ஒருவருக்கும் தெரியாது. பின்னால் இருந்த நிலையும் தெரியாது. யூகத்தில் அந்தச் சிலை கட்டப்பட்டிருக்கிறது. அங்கத்தினர் அவர்கள் அதைப் போய்ப் பார்த்து அது எந்த நிலை என்று சொல்லலாம்.

SRI C. MUTHIAH : கண்ணகி சிலை என் தொகுதியில் இருப்பதால் அங்கு கண்ணகி சிலை ஏற்படுத்திய பின்பு ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு பூஜை செய்ய வருவதன் காரணமாக அங்கு தங்குவோர் மண்டபம் கட்ட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சிலை வைக்க மட்டுந்தான் ஏற்பாடு பண்ணியிருக்கிறது. கோயிலாக்க உத்தேசம் இல்லை. மடம் கட்டுவதாகவும் உத்தேசம் இல்லை.

Murder cases

* 122 Q.—SRI A. A. RASHEED (on behalf of SRI P. S. SANTHANAM) : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து 1959-ம் ஆண்டு ஜனவரி மாதம் முடிய வடாற்காடு மாவட்டத்தில் நடந்த கொலைக் குற்றங்கள் எத்தனை ?